# இந்திய குற்றச்சாட்டிற்கு இல. கடற்படை மறுப்பு

(கொழுமபு)
இந்திய மீனவர்களை இலங்கை கடற்படை மோசமாக இம்சித்து வருவதாக இந்திய அரசு வெளியிட்ட குற்றச்சாட்டை இலங்கை கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் கிளான்ஸி பெர்ணண்டோ மறுத்துள்ளார்.
(4-ம் பக்கம் பார்க்க)

பருவவெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

விலை ரூபா 5.00

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 14 இதழ் 46
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 27 — 03 — 1992

## தமிழக முகாமில் 5 அகதிகள் பலி

(சென்னை)
தமிழகத்தில் உள்ள அகதி முகாம் ஒன்றில் தொற்று நோய் காரணமாக ஐந்து தமிழ் அகதிகள் உயிரிழந்துள்ளனர்.
தமிழகத்தில் அகதிமுகாம்
(4-ம் பக்கம் பார்க்க)

## கத்தோலிக்க குருமார் புலிகள் சந்திப்பு

[யாழ்ப்பாணம்]
யாழ். வந்துள்ள கத்தோலிக்க குருமார்கள் அடங்கிய தூதுக்குழுவினர் இன்றுகாலை விடுதலைப் புலிகள் தலைவர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார்கள்.
(4-ம் பக்கம் பார்க்க)

# அண்மைக்கால யுத்தங்களில் படையினருக்கு பெரும் இழப்பு: இராணுவம் ஒப்புக்கொள்கிறது

(கொழும்பு)
**அண்மைக்காலங்களில் வடக்கு—கிழக்கு யுத்த முனைகளில் இராணுவத்திற்குப் பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளதை இராணுவப் பேச்சாளர் கேர்ணல் சரத் முனசிங்க ஒப்புக்கொண்டுள்ளார்.**

மணலாறு போர் உட்பட பல யுத்தங்களில் பல இராணுவ வாகனங்கள் பலத்த சேதமடைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

மணலாறில் தொடர்ந்து நடைபெற்றுவரும் போர் இராணுவத்தினருக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் அவர் தெரிவித்தார் (சி)

## ஆனையிறவு முகாம் மீது புலிகள் தாக்குதல்

(கொழும்பு)
ஆனையிறவு இராணுவ முகாம்மீது நேற்று முன்தினம் விடுதலைப்புலிகள் கடும் தாக்குதல்கள் நடத்தியதாக இராணுவ தரப்பில் நேற்று தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலில் படையினருக்கு ஏற்பட்ட சேதவிபரம் பற்றி எதுவும் தெரியவரவில்லை. (மா)

## புலிகளைப் பிடிக்க இந்தியா பிரான்ஸை நாடுகிறது

(புதுடில்லி)
ராஜீவ் காந்தி கொலையில் சம்பந்தப்பட்டு பிரான்ஸில் தலைமறைவாகியுள்ள விடுதலைப் புலிகளை அங்கு தேடிப் பிடிக்க உதவுமாறும் இதற்கு இந்தியா ஒத்துழைப்பு வழங்குமெனவும் இந்தியா பிரான்ஸிடம் கோரியுள்ளது

இக்கோரிக்கையை இந்திய உள்நாட்டு இணைய மைச்சர் திரு. எட்வர்டோ பெலேரோ இந்தியா வந்துள்ள பிரெஞ்சு வெளிவிவகார அமைச்சின் செயலர் திரு.அலன் விவ்வியனுக்கு விடுத்துள்ளார். (சி)

## விடுதலைப்புலிகள் விவகாரம் இந்திய அரசு குழப்பநிலையில்

[புதுடில்லி]
ராஜீவ் கொலை வழக்கு தொடர்பாக புலிகளின் தலைவரை கைது செய்வது குறித்து இந்திய அரசின் நடவடிக்கையில் குழப்பநிலைதோன்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

திரு. பிரபாகரனை கைது செய்வது குறித்து மத்திய அரசின் இரு அமைச்சகங்கள் இடையே மாறுபட்ட கருத்து நிலவுவதாகமாநிலங்கள் அவையில் வெளியிடப்பட்டது.

புலிகளை தடை செய்வது குறித்து அரசு ஆராய்ந்து வருகிறது. புலிகள் தலைவரை கைது செய்து இந்தியாவுக்கு அனுப்பி வைக்கும்படி இலங்கையுடன் பேச்சு நடாத்தப்படுமென உள்துறை அமைச்சர் சவான் தெரிவித்துள்ளார்.

பிரபாகரன் விடயம் குறித்து இலங்கை அரசுடன் அணுகவில்லையென்றும், ராஜீவ் கொலையை புலனுய்வுசெய்து வரும் விஷேட புலனுய்வுக்குழு
(4-ம் பக்கம் பார்க்க)

## இந்தியப் படை இலங்கைக்கு உதவி

(கொழும்பு)
இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் தீவிரவாதிகளின் நடமாட்டத்தைக் கட்டுப் படுத்த இந்திய கடற்படையின் கரையோர காவல் படையினர் உதவி வருவதாக கடற்படைத்தளபதி ரியர் அட்மிரல் கிளான்ஸி பெர்ணண்டோ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது: எமது கடற்பிராந்தியத்திற்குள் இந்
[4-ம் பக்கம் பார்க்க]

## ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)
வடமராட்சியிலும், கிளிநொச்சியிலும் அமுலிலிருந்த ஊரடங்கு உத்தரவு நீக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. (கே)

## உலகக் கிண்ண கிரிக்கெட்: ஐவர் உயிரிழப்பு!

(கராச்சி)
உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் பாகிஸ்தான் வெற்றி பெற்றதையடுத்து எழுந்த மகிழ்ச்சி ஆர்ப்பாட்டத்தில் பாகிஸ்தானல் ஐவர் உயிரிழந்தனர்.

பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றதையடுத்து கராச்சி நகரில் பெரும் மகிழ்ச்சி ஆரவாரம் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது கூட்டத்தைக் கட்டுப்படுத்தப் பொலிசார் சுட்டதில் மூவர் உயிரிழந்தனர்.

இறுதியாட்டத்தை ரி. வி. யில் பார்த்துக்கொண்டிந்தவர்களில் இருவர் பாகிஸ்தான் வென்றதையடுத்து மாரடைப்பால் மரணமானுர்கள். (சி)

## இனப்பிரச்னை தீர்வு இணக்கம் காணவேண்டிய 3 விடயங்கள் தெரிவு

(கொழும்பு)
இனப்பிரச்னைக்கு தீர்வு காண நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக்குழு, இணக்கம் காண வேண்டிய மூன்றுவிடயங்களை கண்டறிந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

* அதிகாரப் பகிர்வின் எல்லை, * பகிரப்படவேண்டிய அதிகாரங்கள், * வடக்கு-கிழக்கில் உள்ள சிறுபான்மையினரின் பாதுகாப்பு ஆகிய மூன்று அம்சங்களிலும் இணக்கம் ஏற்டுடுத்தப்பட வேண்டும் என்பனவையே அவையாகும்.

தெரிவுக் குழுவின் அடுத்த கூட்டம் ஏப்ரல் 21ல் இடம் பெறும். அப்போது இது குறித்து ஆராயப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (கே)

## புலிகள் சார்பான கடிதத்தை ஏற்க தெரிவுக் குழு மறுப்பு

[கொழும்பு]
விடுதலைப் புலிகள் சார்பாக சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் கடந்த செவ்வாய்க்கிழமை எழுத்துமூலம் கையளித்த கடிதத்தை ஏற்றுக்கொள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழு மறுத்துவிட்டது.

மூன்றாவது தரப்பினூடாக அனுப்பப்படும் செய்திகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்றும் புலிகள் நேரடியாகவே தெரிவுக்குழுவிற்கு எழுத வேண்டுமெனறும் தெரிவிக்கப்பட்டுள்ளது (கே)

## மணலாறு போர் மேலும் தொடரும்

[கொழும்பு]
''மணலாறுபகுதியில் நடைபெற்றுவரும் ''ஹயபாற'' இராணுவ நடவடிக்கை அதன் குறிக்கோள் முடிவடையும் வரை நிறுத்தப்படமாட்டாது'' என்று கூட்டுப்படை தலைமையக இராணுவ பேச்சாளர் கேர்ணல் சரத்
(4ம் பக்கம் பார்க்க)

## புனர்வாழ்வு நிதி பெருமளவு குறைப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்தின் புனர்வாழ்வு வேலைத் திட்டங்களுக்கு அரசு இவ்வருடம் பெருமளவு பணத்தை குறைத்துள்ளது.

யாழ். மாவட்டத்தில்,
(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தர்நோவு எண்ணெ கிடைக்குமிடம் எஸ். ரி. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி 6040)

### G.C.E.A/L பௌதிகவியல்

பல ஆண்டுகளாக பௌதிகவியல், தூயகணிதம், பிரயோக கணிதம் கற்பித்துவரும் ஆசிரியரால் தனிப்பட்டமுறையில் மேற்படி பாடங்கள் சிறப்பாக கற்பிக்கப்படும். R. பாலசுப்பிரமணியம் B.Sc., (Cey.) Dip.in Ed. 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (சி-6088)

### தேவை

றவுசர், சேட், சோட்ஸ் தைக்கத் தெரிந்த ரெயிலர்களும், ஜென்ஸ் வேலைதெரிந்த பெண்களும் தேவை. நேரில் வாவும் நல்ல சம்பளம் தரப்படும். ஜெகபதி காம் றெக்ஸ், அந்தோனியார் கோவிலடி, மானிப்பாய். (சி-6095)

ஏற்பூசி மருந்து

## தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையில் ஏற்பூசி மருந்துகள் முடிவடைந்துவிட்டதினால் வடமராட்சிப் பகுதியிலிருந்து இந்த ஊசியை ஏற்றுவதற்கு யாழ். போதனைவைத்தியசாலை நோக்கி தினமும் 15 க்கும் மேற்பட்டோர் வருகின்றனர்.

இங்கு விடுதிகளுக்கு அனுமதிக்கப்படும் நோயாளர்கட்கு அவசர தேவைக்கு மட்டுமே சொற்பளவில் மருந்தைவைத்திருப்பதனால் தற்போதுஇங்கு வரும் நோயாளர்களுக்குஏற்றுவதற்கு ஏற்பூசிமருந்து இல்லையென்று தெரிவிக்கப்படுகின்றது. (56)

தகவல்

## தொடர்பு மையங்கள்

(சென்னை)

கடலில் மீன்பிடிக்கும்போது காணமற்போகும் மீனவரை கண்டுபிடிக்குமுகமாக இராமேஸ்வரம், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் விசேட தகவல் தொடர்பு மையங்கள் விரைவில் நிறுவப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம் மையங்கள் மூலம் காணமல் போகும் மீனவர் பற்றிய விபரங்களை உடனுக்குடன் கடற்படை மற்றும் விமானப்படைக்கு டெலக்ஸ் மூலம் அறிவிக்க முடியுமென்றும் கூறப்படுகிறது.

நீர்வேலியில்

## நாய்களுக்கு தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

நாய்களுக்கு தடுப்பூசி போடும் நடவடிக்கை நீர்வேலிப் பகுதியில் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிராமசேவகர் பிரிவு ரீதியான தடுப்பூசி போடும் நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் நாய்களுக்கு விசர்நோய் ஏற்படுவதை தடுக்கும் முகமாக மேற்படி நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

கம்பியூட்டர்

## உபகரணம் அன்பளிப்பு

(கொழும்பு)

9,500 அவுஸ்திரேலிய டொலர் பெறுமதியான கம்பியூட்டர் உபகரணங்கள் பேராதனை பல்கலைக்கழக புவியியல் பீடத் தலைவரிடம் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகரால் அண்மையில் கையளிக்கப்பட்டுள்ளது.

காலநிலை பாதிப்புக்கள் மற்றும் முகாமைத்துவம் சம்பந்தமாக இக்கம்பியூட்டர்களை பயன்படுத்தக்கூடியதாகவிருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## இறையன்பில் இணைந்த 8 ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:

21-10-1950

★

உதிர்வு:

27-03-1984

### அமரர் R. A. பிரான்சிஸ் றணசிங்க

Police Sergeant (P. S. 3603) (Jaffna Police Station)

உம் அன்பான புன்சிரிப்பாலும், பண்பான பேச்சாலும், பணிவான நடத்தையாலும் எம் இதயம் கவர்ந்த அன்பின் தெய்வமே! எங்கு சென்றீர்? போகும்போது மீளமாட்டேன் என ஒரு வார்த்தை சொன்னீரோ? காலமெல்லாம் எங்களுக்கு வழிகாட்டியாக இருப்பீரென இருந்தோம். காலன் உம்மை பாதி வயதில் பறித்தானே? நீர் சென்றாலும் நீர் விட்டுச் சென்ற பாசம் எங்களை விட்டு ஒரு போதும் நீங்காது. உம் ஆத்மா சாந்தியடைய அந்தோனியாரை வேண்டுகின்றோம்.

இவரின் ஆத்மசாந்திக்காக பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

என்றும் உம் நினைவிலும் வழியிலும் வாழும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
அருமைச் சகோதரி, பெற்றோர்,
உற்றூர், மைத்துனர்மார், மைத்துனிமார்,
உறவினர், நண்பர்கள்.

துண்டி றோட்,
கொழும்புத்துறை.

(சி-6094)

COMMERCIAL BANK

## வர்த்தக வங்கி - யாழ். கிளை

# புத்தாண்டு பரிசுப் போட்டி

வருகின்ற தமிழ் / சிங்கள புத்தாண்டு தினத்தையொட்டி
**வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கியின்**
**யாழ். கிளையானது**
**தனது வாடிக்கையாளர்களுக்கும் இப்பிரதேச மக்களுக்குமாக**
புத்தாண்டுப் பரிசுத் திட்டம் ஒன்றை முன்வைக்கின்றது
இதன் பிரகாரம் கீழே தரப்பட்ட
**கேள்விக் கொத்துக்கு சரியான விடை அளிக்கின்றவர்களில்**
50 பேருக்கு அவரவர் அதிர்ஷ்டத்திற்கு உரிய வகையில்

★ **பரிசில்கள் காத்திருக்கின்றன** ★

இதில் பங்குபற்ற விரும்புபவர்கள் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விக் கொத்தை

**முகாமையாளர்,**
**வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி,**
**ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

என்ற முகவரிக்கு தபால் மூலம் அல்லது நேரில் 31-03-1992க்கு முன்பு கிடைக்கக்கூடியதாக அனுப்பவும் அல்லது கையளிக்கவும்.

குறிப்பு:- இப் போட்டியில் பங்குபற்றுபவர்கள் 31-03-1992 அன்று 18 வயதிற்குக் குறையாதவர்களாக இருக்க வேண்டும்:

★ பரிசு பெறுபவர்களின் விபரம் பத்திரிகைகளில் வெளியிடப்படும்.
இப் போட்டியில் வங்கியினால் எடுக்கப்படும் முடிவே இறுதியானதும் தீர்க்கமானதும் ஆகும்.
வங்கி ஊழியர்களும் அவர்களது குடும்பத்தவரும் இப்போட்டியில் பங்குபற்றுதல் தவிர்க்கப்பட்டுள்ளது.

### வர்த்தக வங்கி - யாழ். கிளை

## கேள்விக் கொத்து

1. வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி எப்போது ஸ்தாபிக்கப்பட்டது?

..............................

2. தற்போதைய வர்த்தக வங்கியின் யாழ். கிளைக் கட்டடம் முன்பு எந்த நிறுவனத்தின் உடைமையாக இருந்தது?

..............................

3. யாழ். வர்த்தக வங்கிக் கிளை இக் கட்டடத்தினைப் பொறுப்பேற்று எப்போது செயற்படத் தொடங்கியது?

..............................

4. வர்த்தக வங்கிக்கு தற்போது இலங்கையில் எத்தனை கிளைகள் உண்டு?

..............................

5. அவை எங்கெங்கு உள்ளன?

..............................

..............................

6. வர்த்தக வங்கியின் தலைமைச் செயலகத்தின் முகவரியைத் தருக?

..............................

7. இவ் வங்கியின் தற்போதைய நிர்வாக இயக்குநரின் பெயர் என்ன?

..............................

8. வர்த்தக வங்கியினால் மிகவும் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட இரண்டு சேமிப்புத் திட்டங்களின் பெயரினைத் தருக?

..............................

9. யாழ். வர்த்தக வங்கிக் கிளையில் சேமிப்புக் கணக்கை ஆரம்பிப்பதற்கான ஆகக்குறைந்த ஆரம்ப வைப்புத் தொகை எவ்வளவு?

..............................

10. தற்போது இவ் வங்கியினால் சேமிப்புக் கணக்கு வைப்புகளுக்கு வழங்கப்படும் வட்டி வீதம் யாது?

..............................

**அனுப்புபவரின்**

முழுப்பெயர்:- ..............................

அடையாள அட்டை இலக்கம் / கடவுச்சீட்டு இலக்கம்:- ..............................

முகவரி:- ..............................

..............................

..............................

(ஏ 2000)

# "இன்றைய போராட்டத்துக்கு முற்போக்கு எழுத்தாளர்கள் ஆதரவு நல்கவேண்டும்"

## பேராசிரியர் சிவத்தம்பி

(யாழ்ப்பாணம்)

''இன்றைய போராட்டத்துக்கு, முற்போக்கு எழுத்தாளர்கள் ஆதரவு நல்கவேண்டும். ஏனென்றால் முற்போக்குக் கொள்கைக்கும் இன்றைய இளைஞர்களின் போராட்ட கொள்கைகளுக்கும் ஒரு ஒருமைப்பாடு உள்ளது.''

இவ்வாறு பேராசிரியர் கா. சிவத்தம்பி நல்லூர் கம்பன் கழகத்தில் நடைபெற்ற அமரர் கே. டானியலின் ஆருவது நினைவஞ்சலிக் கூட்டத்தில் பேசும்போது கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:இன்று தேசியம், சிங்கள தேசியம், தமிழ் தேசியம், முஸ்லிம் தேசியமென இருக்கிறது. இந்தத் தமிழ் தேசியவாதத்தின் தளை நீக்க அரசியல், சமூக. பொருளாதார வடிவங்கள், பெண்ணுரிமைகள் உள்ளடக்கியதாக உள்ளது.

1960ம் ஆண்டுக்குப் பின்பு முறபோக்கு எழுத்தாளர்கள் கருதிய 'தேசியம்' என்ற சிங்களவர், தமிழர், முஸ்லிம் ஆகிய இனங்களிடையே உள்ள எண்ணங்கள் வலிமையடைந்ததாக இல்லை, இது ஒரு தோல்வியாகும். இந்தத் தோல்விதான் இளைஞர்களின் இன்றைய போராட்டத்துக்கு ஊற்றுக்களாக இருந்தன.

சுயநிர்ணய உரிமை, சமூக பொருளாதாரம், விடுதலை என்பவை அன்றைய குறிக்கோள்களாகும். இவை முற்போக்கு எழுத்தாளர்களிடம் கொண்ட இலட்சியத்துள் ஏற்கனவே அடங்குபவையாகும்.

தமிழர்களிடத்தில் பின்நோக்கு தன்மை ஏற்பட்டுவருகின்றது. 5ம் வகுப்பு கேள்வித்தாள்களிலும், கல்விப்பொதுத் தராதர உயர்தர தமிழ் இரண்டிலும் எடுத்துப் பார்த்தால் கடந்த இருபது ஆண்டுகாலத்தில் தமிழ் இலக்கிய வளர்ச்சிகள் மறைக்கப்படுகிறது.

கடந்த 10 வருடகாலத்தில் 1977, 78ம் ஆண்டுகளில் கல்வி நிறுவன அமைப்புக்கள் இந்த வளர்ச்சிகளை மறுதலிக்கின்றன.

இன்று யாழ்ப்பாணத்தில் தமிழ் இல்லை, இலக்கியம் இல்லை என்ற சாரம் யாழ்ப்பாணப் பகுதியில் வளர்ந்து வருகிறது.

பண்டிதமணி கணபதிப்பிள்ளைக்கு நவீன இலக்கியத்தில் ஆர்வம் இருந்தது. நவீன இலக்கிய சார்புள்ளார்க்கு தமிழ் அறிவு இல்லை என்றும் கூறப்பட்டும் வந்தது.

காலரீதியான முரண்பாடுகளைத் தவிர்த்து, இந்த இலக்கிய இயக்கத்தின் ஊடாக எழுத்தாளர்கள் மாற்றுப் பாதைகளைப் பயன்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் இந்தக் கால ஓட்டத்தில் நாங்கள் மேலும் பின்னேக்கிச் செல்வோம். (சு)

## இரணைமடுவில் மேய்ச்சல் தரை அமைக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடுக் குளத்தினைக் கிட்டிய பகுதியில் மேய்ச்சல் தரவை ஒன்றினை அமைப்பதற்கு தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் திட்டமிடப்பட்டுள்ளது. பயிர்ச் செய்கையை பாதுகாப்பதற்காக கால்நடைகளைக் கட்டுப்படுத்தும் செயல்பாடுகளை அமுல் நடத்தும்போது மேய்ச்சல் தரைகள் இல்லாமல் அவற்றைப் பராமரிப்பதில் உள்ள சிரமங்களைத் தவிர்ப்பதற்காக இத்திட்டம் பற்றி ஆலோசிக்கப் பட்டது.

தற்போது மேய்ச்சல் தரவையினை அமைப்பதற்காக ஆரம்ப ஆய்வுகள் நடத்தப் பட்டு வருகிறது. இத்திட்டம் எட்டரை லட்சம் ரூபா செலவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

## இராசிபலன்

**27/03/1992**

**வெள்ளிக்கிழமை**

**(தமிழுக்கு பங்குனி 14)**

நவமி பி. இ. 1-42 வரை, பூராடம் மு.ப. 3 - 37 வரை, சித்தயோகம், இராகு காலம் காலை 6-14 முதல் 7-44 வரை. காலை 10-44 முதல் 12-14 வரை சுபநேரம்.

மேடம்: தொழில் சிக்கல், மனக்கசப்பு, அதிகஆசை.

இடபம்: திடீர் கோபம், கவலைவாட்டிடும், பணமுடை.

மிதுனம்: சகிப்புத்தன்மை, நண்பர்வருகை, தொழில் சிறப்பு.

கடகம்: புதிய ஸ்தானம், குடும்பசுகம், அந்தஸ்து.

சிங்கம்: கலையார்வம், முயற்சியில் தோல்வி பணவரவு.

கன்னி: கோள்மூட்டல், பணவிவகாரம், ஓய்வின்மை.

துலாம்: ஆடரம்பரவசதி, தனிப்பட்டபுகழ், மனநிறைவு

விருச்சிகம்: குடும்பபிரிவு, ஆளடிமை, குளப்பம்.

தனுசு: வேடிக்கைப்பேச்சு, தந்தை ஆதரவு, கற்பனை.

மகரம்: தடுமாற்றம் மனச் சஞ்சலம் அமைதியின்மை.

கும்பம்: குடும்பபாசம், உல்லாசபயனம், பெண்லாபம்.

மீனம்: செல்வாக்கு, கடமை உணர்வு, அதிகாரிகள் பாராட்டு.

-ஜோஸ்யர்

## தமிழகத்திலிருந்து தலைமன்னருக்கு 149 அகதிக் குடும்பங்கள்

(சென்னை)

தமிழகத்திலிருந்த 149 அகதிக்குடும்பங்கள் இராமேஸ்வரத்திலிருந்து நேற்று முன்தினம் கப்பல் மூலம் தலைமன்னருக்கு புறப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

செங்கல்பட்டு, திண்டுக்கல், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மண்டபம் ஆகிய அகதி முகாம்களில் தங்கியிருந்த இலங்கை தமிழ் அகதிகளே இவ்வாறு புறப்பட்டனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (க)

## மின்வெட்டு அமுலாகும்

(கொழும்பு)

நீர்த்தேக்கங்களில் நீர் நிலைமை மோசமாகியுள்ளதால் நாட்டின் சகல பாகங்களிலும் இன்னும் சில நாட்களில் மின்வெட்டு அமுலுக்கு வரலாமென்று இலங்கை மின்சார சபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வி)

## கடலுக்கு அடியில் தொல்பொருள் ஆய்வு

(கொழும்பு)

இலங்கையில் முதற்தடவையாக கடலுக்கு அடியில் தொல் பொருள் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. காலித்துறைமுகத்தில் இந்த ஆய்வுவேலைகள் ஆரம்பிக்கப்படும்.

அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் உதவியோடு இலங்கை அரசாங்கம் இதனை மேற்கொள்ள இருக்கிறது.

ஆரம்ப ஆய்வுவேலைகள் காலித்துறை முகத்தைச் சுற்றி மேற்கொள்ளப்பட இருப்பதோடுஇவற்றை ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

ஆய்வுவேலைகளின் போது கடலுக்கடியிலிருந்து கண்டெடுக்கப்படும் தொல் பொருட்கள் யாவும் காலியிலுள்ள கடற்படை நூதனசாலையில் காட்சிக்கு வைக்கப்படும்..

## க. பொ. த. (உயர்தர) பரீட்சை கிளிநொச்சியில் மூன்று நிலையங்களில் நடைபெறும்

(கிளிநாச்சி)

எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பமாகும் க. பொ. த. உயர்தர விசேட பரீட்சை கிளிநொச்சி மாவட்டத்தில் மூன்று நிலையங்களில் நடைபெற ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்கி மாவட்டக் கல்விப் பண்ப்பாளர் கே. கந்தசாமி தெரிவித்தார்.

இப் பரீட்சை நிலையங்கள் கிளிநொச்சி மகாவித்தியாலயத்திலும், கனிஷ்ட வித்தியாலயத்திலும் அமைந்துள்ளதாகவும் பாடசாலைப் பரீட்சார்த்திகள் அனுமதி அட்டைகளை உரிய அதிபர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம் எனவும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்குரிய அனுமதி அட்டைகள் அவர்களது பிரத்தியேக முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பூநகரிப் பிரதேச முகவரி கொண்ட அனுமதி அட்டைகள் கல்வித் திணைக்களத்தில் உள்ளதாகவும் உரியவர்கள் வந்து பெற்றுக்கொள்ளலாம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (83)

## மார்ச் மாத பென்ஷன்

[யாழ்ப்பாணம்]

மார்ச் மாத பென்ஷன் திங்கள் முதல் வங்கிகளில் பெறலாமென யாழ். செயலகம் தெரிவித்தது.

மார்ச் மாத பென்ஷனுடன் 300 ரூபா பாக்கி பணமும் வழங்கப்படுமென்றும் கூறப்படுகின்றது. (வி)

## ஆசிரியர்மாணவர்நலன்களை பேண சபை நிறுவப்படும்

(உடுவில்)

மாணவர்களிடையே சமய நம்பிக்கைகள், பாரம்பரிய பழக்க வழக்கங்கள், பண்பாடுகள்போன்றவற்றைவளர்த்துப் பேணவும், மாணவர்கள் ஆசிரியர்களுடைய நலன்கள் பேணப்படவும் உரிய சபைகளை அமைக்குமாறு பாடசாலைகளுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய ஒவ்வொரு பாடசாலைகளிலும் சமய சபைகள், நலன்பிரிப்பு பிரிவுகள் போன்றவை அமைக்கப்பட உள்ளன.

சமய சபைகளின் தலைவராக அந்தந்த பாடசாலைகளின் அதிபர்களே செயற்படுவர்.

செயலாளராக அப்பாடசாலையின் சமயபாட ஆசிரியர் ஒருவர் பணியாற்றுவார். அத்துடன் பாடசாலையுடன் தொடர்புடையபாடசாலைக்கு அண்மையில் உள்ள கோவில் நிர்வாகிகள், பெற்றோர்கள், ஆசிரியர், மாணவர்கள் கொண்ட நிர்வாக சபையினர் இச்சமய சபைகளில் இடம் பெறுவர்.

ஆசிரியர்கள் மாணவர்களுடைய நலன்கள், உரிமைகள் பேணப்படுவதற்காக நலன் பிரிப்பு பிரிவுகளும் அமைக்கப்பட்டு செயற்படவுள்ளன.

இந்நலன் பிரிப்பு பிரிவுகள் பாடசாலையை விட்டு வெளியேறும் மாணவர்களுக்கு அவர்களின் தராதரத்துக்கேற்ப அவர்கள் உயர் கல்வி பெற்றுக்கொள்ள வேண்டிய வசதிகளையும், உதவிகளையும் வழங்குவது:

பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தி பாடசாலையை விட்டு வெளியேறும் மாணவர்களுக்கு உதவுவது:

பாடசாலைகளுக்கு செல்லும் வயதை அடைந்ததும் பாடசாலைகளில் சேர்ந்து கல்வி பெருமல் இருக்கும் பிள்ளைகளை கண்டறிந்து அவர்களை பாடசாலைகளில் சேர்ப்பதற்கு வேண்டிய வழிகளை அமைத்துக்கொடுப்பதுபோன்ற பல நல்நோக்கங்களை நலன்பிரிப்பு பிரிவுகள் மூலம் நிறைவுசெய்யவும் நடவடிக்கை எடுக்கப்படுமென கல்வி உயர்கல்வி அமைச்சு அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது. (109)

## மேமாதம் கொழும்பில் சாகித்திய விழா

(கொழும்பு)

கொழும்பில் மேமாதம் நடைபெறவுள்ள தமிழ் சாகித்திய விழாவில் ஜனுதிபதியும் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்த விழாவில் வைத்து சாகித்திய பரிசு பெற்ற தமிழ் எழுத்தாளர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும். (கே)

## தவக்கால நற்சிந்தனை

கடவுளை அன்பு செய்வதே எமது கடன். அவரை நாம் முழு உள்ளத்தோடும், முழு ஆன்மாவோடும், முழு மனத்தோடும், முழுவலிமையோடும் அன்பு செய்ய வேண்டும். இதேபோல், நம் மீது அன்பு காட்டுவது போல் நம் அயலார் மீதும் அன்பு காட்ட வேண்டும். இது இறைவனின் அன்புக் கட்டளை.

இறை அன்பும் பிறரன்பும் நம் இரு கண்களாக வேண்டும்.

- மோ. தார்சிசியஸ்


# திருமண அழைப்பு

அன்புடையீர்!

எதிர்வரும் பங்குனி 16ம் நாள் (29-03-1992) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10-45 மணி முதல் 12-40 மணிவரையிலான இனிய வேளையில்,

| எமது ஏக புதல்வன் | எமது சிரேஷ்ட புதல்வி |
|---|---|
| **சிவச்செல்வன்** | **சலஜா** |
| அவர்கட்கும் | அவர்கட்கும் |

திருமணம் நடாத்த பெற்றோர்கள் நிச்சயித்திருப்பதால் இல்லற நந்தவனத்தில் நுழையும் புதுமண ஜோடிகளை வாழ்த்திச் செல்லுமாறு உங்களை பிரியமுடன் அழைக்கின்றோம்.

**உங்களை வரவேற்போர்**

| | | | |
|---|---|---|---|
| செல்வா ரமணி | (சுவிஸ்) | ★ | க. கணேசலிங்கம் (சுவிஸ்) |
| ரவி லதா | (சுவிஸ்) | ★ | கோ. கந்ததாசன் (ஜேர்மனி) |
| ரவி மதனு | (சுவிஸ்) | ★ | கி. செந்தில்நாதன் (சுவிஸ்) |
| சுதா பிரபா | (சுவிஸ்) | ★ | சி. வசீகரன் (சுவிஸ்) |

மகிழ்ச்சியுடன்

திரு. திருமதி தனபாலசிங்கம் பரமேஸ்வரி (காப்புறுதி அமைப்பாளர்)

திரு. திருமதி தனேஸ்வரன்புஸ்பலதா (ஆசிரியர் B/A, ஆசிரியை B/A)

செல்வன் த. இலங்கேஸ்வரன் (சுவிஸ்)

திருமதி செல்லத்தம்பி இலட்சுமி

திரு. திருமதி இராஜநாயகம் சரோசினிதேவி

திரு. திருமதி ரஞ்சிதநாதன் பரமேஸ்வரி

வைபவம் நிகழுமிடம்:

KIRCHGEMEINDESAAL [HOTTINGEN] ASYL Str 32
H. B. Tram No. 3 direction "Klusplatz" Halt " Romerhof:

குறிப்பு: மேற்படி திருமண வைபவ நேரத்தில் அல்வாய் வடக்கு, அல்வாய் அரசடி விநாயகர் ஆலயத்தில் விஷேச பூசை நடைபெறும்.

(சி-6087)

# வடக்கு-கிழக்கிற்கு புதிதாக 78 அரச அதிபர்கள் நியமனம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப்பகுதிக்கு 78 புதிய பிராந்திய அரச அதிபர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

செயலக வேலைகளை விஸ்தரிக்கும் திட்டத்தின்கீழ் தற்போது நிறுவப்பட்டு வரும் ஒருங்கிணைக்கப்பட்ட பிராந்திய செயலகங்களை நிருவகிப்பதற்கு 230 பிராந்திய அரசாங்க அதிபர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

மேலும் 78 பிராந்திய அரசாங்க அதிபர்களே வடக்கு-கிழக்கில் கடமையாற்ற நியமிக்கப்படவுள்ளனர். மொத்தம் 328 புதிய நிர்வாக பகுதிகள் இவர்களின் நிர்வாகத்தின்கீழ் வரும். (கே)

## லலித்தின் பாதுகாவலர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலியின் மெய்ப்பாதுகாவலர் கடந்த செவ்வாயன்று பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். திரு. அத்துலத் முதலியின் தனிப்பட்ட மெய்ப்பாதுகாவலராக விளங்கிய இந்த நபர் வேறு இருவருக்கு அங்கீகாரமின்றி சூழல் துப்பாக்கி ஒன்றைக் கொடுத்ததாகக் கூறிப் பொலிசார் இவரைக் கைது செய்துள்ளனர்.

## கொக்கட்டிச்சோலை படுகொலை
# 50 லட்சம் ரூபா நஷ்டஈடு வழங்க ஏற்பாடு

(கொழும்பு)

கொக்கட்டிச்சோலையில் இடம்பெற்ற இராணுவத் தாக்குதலில் உயிரிழந்த காயமடைந்த பொதுமக்களுக்கும், அவர்களது சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கும் நட்டஈடாக ஐம்பது லட்சத்துக்குச் சற்றுக் கூடுதலான தொகை வழங்கப்படவுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணை செய்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் சிபார்சுகளை ஏற்றுக்கொள்வதென அமைச்சரவை தீர்மானித்துள்ளது. (ரி)

## ராணுவ கெடுபிடியிலும் அன்னைபூபதி நினைவுதினம்

(மட்டுநகர்)

இராணுவக் கெடுபிடிகளின் மத்தியிலும் அன்னை பூபதியின் நினைவு தினம் மட்டக்களப்பில் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

வீதிகளில் பதாதைகள் மற்றும் அன்னை பூபதியின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டு நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. ராணுவம் வரும்போது படங்கள் அகற்றப்பட்டு மீண்டும் வைக்கப்பட்டு நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. (ரி)

## அன்னை பூபதி நினைவு நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

அனைத்துப் பாடசாலைகளிலும் அன்னை பூபதியின் நினைவுக் கூட்டங்கள் ஏப்ரல் 1-ம் திகதி புதன்கிழமையன்று நடாத்துவதென ஆசிரியர்கள் தீர்மானித்துள்ளார்கள்.

க. பொ. த. உயர்தர விசேட பரீட்சை நடைபெறும் பாடசாலைகள் இம்மாதம் 31-ம் திகதி நடாத்தவுள்ளன.

குறைந்தது இரண்டு மணி நேரம் நடைபெறவுள்ள இந்த நினைவு நிகழ்வில் மாணவர்களின் பேச்சுக்கள், கவிதை, கலையம்சங்கள் என்பனவும், ஆசிரியர்களின் சிறப்புரைகளும் நடைபெறும்.

# ஜெயலலிதாவின் பாதுகாப்பு மேலும் பலமடைகிறது!

(சென்னை)

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கான பாதுகாப்புஏற்பாடுகள்தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. எஸ். பி. சவான் இத்தகவலைத் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தற்கொலைப்படை பிரிவு ஒன்று தமிழகத்திற்குள் நுழைந்திருப்பதாக வெளிவந்த தகவல்களையடுத்தே தமிழக முதல்வருக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

அண்மையில் தமிழக முதல்வர் புதுடில்லி விஜயம் செய்தபோது தமிழகத்தில் விடுதலைப்புலிகளின் தற்கொலைப்படையின் ஊடுருவல் குறித்தும் இதனால் தமது உயிருக்கு ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தல் குறித்தும் மத்திய அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்திருந்தார் என்று திரு. சவான் மேலும் தெரிவித்தார்.

## இந்திய குற்றச்சாட்டிற்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இது மிகைப்படுத்தப்பட்ட ஒரு குற்றச்சாட்டு என்றும் அவர் கூறினார்.

இதேவேளை புலிகளுக்கு எதிராக இந்தியப்படைகள் மேற்கொள்ளும் நடவடிக்கை மிகவும் பாராட்டத்தக்கது. தொடர்ந்தும் இந்தியப்படையினர் இந்த ஒத்துழைப்பை வழங்கவேண்டுமெனவும் கிளான்ஸி பெர்ணாண்டோ கூறியுள்ளார். [ரி]

## 3,000 குடும்பங்கள் இலங்கை திரும்பின

[கொழும்பு]

தமிழகத்தில் அகதிகளாக இருந்தவர்களில் 11,340 பேரடங்கிய 3,388 குடும்பங்கள் இதுவரை இலங்கைக்கு திரும்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ரி)

# வடபகுதி விஜயம் குறித்து பௌத்த பிக்குகள் ஆலோசனை

(கொழும்பு)

வடபகுதிக்கான தமது விஜயம் குறித்து ஏழுபேர் கொண்ட பௌத்த குருமார் குழு சர்வதேச தொண்டர் அமைப்பொன்றின் பிரதிநிதிகளுடன் பேச்சுக்கள் நடாத்தி வருதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி தொண்டர் நிறுவனம் பயணத்திற்கான முழு ஏற்பாடுகளையும் மேற்கொண்டதும் பௌத்தகுருமாரின் வடபகுதி விஜயத்திற்கான திகதி அறிவிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மேற்படி பௌத்த குருமார் சில வெளிநாட்டு ராஜதந்திரிகளை சந்தித்ததாகவும் கூறப்படுகிறது. (சி)

## இந்தியப்படை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திய மீன்பிடி படகுகள் நடமாடுவது பாதுகாப்பைப் பேணுவதில் பிரச்னைகளை ஏற்படுத்துகிறது. (ரி)

## விடுதலைப்புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டுக்கொண்டால் மாத்திரமே இது குறித்து இலங்கையுடன் பேச்சு நடாத்தலாமெனவும் உள்துறை இணை அமைச்சர் திரு எட்வர்ட் பெலேரோ தெரிவித்துள்ளார். (சி)

## வேளாண்மை போட்டி பரிசு

(யாழ்ப்பாணம்)

வதிவிட வேளான்மை போட்டி பிரதேசமட்ட பரிசளிப்புவிழா அடுத்த மாதம் 10-ந் திகதி வரை வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் பகுதிகளில் நடைபெறவுள்ளது.

## மணலாறு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முனசிங்க தெரிவித்தார்.

இந்த மணலாறு யுத்தத்தில் ஒரு இராணுவ உயர் அதிகாரி உட்பட 40 படையினர் கொல்லப்பட்டதாகவும் 160 படையினர் காயமடைந்ததாகவும் கேர்ணல் சரத் முனசிங்க தெரிவித்தார். (மா)

கனடாவில்

# தனது இரு குழந்தைகளை கொன்ற தமிழ்த் தாய்

(ரொறன்ரோ)

கோப்பாயிலிருந்து கனடாவில் குடியேறிய தமிழ்ப்பெண் ஒருவர் தன் இரு பெண்குழந்தைகளையும் கழுத்துநெரித்து கொலை செய்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை ரொறன்ரோவிலுள்ள ஸ்காட்டரோ என்ற அவர் வசித்துவந்த இடத்தில் தனது இருகுழந்தைகளையும்கொலை செய்துள்ளார்.

இச்சம்பவம் கனடாவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்தப்பெண் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். (கே)

## கத்தோலிக்க குருமார்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப்புலிகள் தரப்பில் செயலாளர்நாயகம் யோகரத்தினம்[யோகி] அரசியல்ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் இப்பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வர்.

சிலாபம் ஆயர் அதி வணக்கத்திற்குரிய மார்க்கூஸ் பெர்ணண்டோ, கண்டி ஆயர் வியனி பெர்ணண்டோ, சகோதரி எஸ். என். அல்விஸ், அருட்திரு. அல்பிரட் அலெக்ஸாண்டார் ஆகியோர் கத்தோலிக்க குருமார் சார்பில் இச்சந்திப்பில் பங்குபற்றுவார்கள். [ரி-வி]

## அகதிமுகாமில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களில் தொற்றுநோய்களால் ஆயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களில் ஐவர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அகதி முகாமகளில் இரவு நேரத்தில் வெளிச்சம் இல்லை, வைத்தியர்கள் எவரும் கவனிப்பதில்லை. குடும்பக் கட்டுப்பாட்டை செய்யுமாறு ஒரு வைத்திய உதவியாளர் முகாம்களிலுள்ளவர்களை வற்புறுத்துவதாகவும் அகதிகள் தெரிவித்தனர். (சி)

# மரண அறிவித்தல்

## Dr. S. செல்வராசா

பழம்றோட் கந்தர்மடத்தைச் சேர்ந்த Dr. சி. செல்வராசா 25-3-1992 இரவு காலமானார். இவர் தனலட்சுமியின் அன்புக் கணவரும், Dr. யோகநாதன் (லண்டன்), Dr. திருமதி யோகரஞ்சிதம் (லண்டன்), திருமதி ஜெயரஞ்சிதம், ஈஸ்வரநாதன், கணக்காளர் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி மஞ்சுளா (லண்டன்), Dr நவரத்தினம் (லண்டன்), காலஞ்சென்ற சிவலிங்கம் (Tech. Officer) ஆகியோரின் அன்பு மாமனாரும், மகேஸ், நிலுஷா, கோபி, ஜனு ஆகியோர் (லண்டன்), பிரணவன் (பரியோவான் கல்லூரி மாணவன்), சிவரஞ்சினி (புனித ஜோன்ஸ் பொஸ்கோ பாடசாலை மாணவி) ஆகியோரின் அன்புப் பேரனும், செல்வி தங்கலெச்சுமி (சங்கீத ஆசிரியை, யாழ். இந்துக்கல்லூரி) அவர்களின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 1992 மார்ச் 28-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
திருமதி S. தனலட்சுமி,
(மனைவி)

இல. 16, பழம் றோட்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (சி-6096)

## புனர்வாழ்வு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புனர்வாழ்வு வேலைத்திட்டங்களுக்கு இவ்வருடம் 13 கோடியே 70 லட்சம் ரூபாய் தேவைப்படுவதாகவும் இதற்கு பதிலாக 6 கோடியே 30 லட்சம் ரூபாவை மட்டுமே அரசு வழங்குவதற்கு சம்மதம் தெரிவித்திருப்பதாக யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ். மாவட்டதிலுள்ள ஒவ்வொரு திணைக்களங்களுக்கும் இவ்வருடம் தேவைப்படும் பணத்தின் விபரங்களையும் இத்திணைக்களங்கள் இவ்வருடம் மேற்கொள்ள இருக்கும் வேலைத்திட்டங்கள் பற்றிய 87 பக்கங்கள் கொண்ட நீண்ட அறிக்கை ஒன்றை யாழ். செயலகம் தற்போது தயாரித்து அவசர அவசரமாக புனர்வாழ்வு அமைச்சுக்கு அனுப்பியுள்ளது.

கடந்த வருடம் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட புனர்வாழ்வுத் திட்டங்களுக்கு செலவு செய்த பணத்தில் மிகுதி 1 கோடி 80 லட்சம் ரூபாவை இன்னும் அரச வழங்கவில்லை என்றும் தற்போது தெரியவந்துள்ளது. (வி)

# யாழ். மாநகரசபை சனசமூகநிலையங்களுக்கு

எதிர்வரும் 28-03-92-ம் திகதி சனிக்கிழமை மாலை 4-30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறும் கலந்துரையாடலில் யாழ். மாநகர சபைப் பிரிவுக்குள் இயங்கும் எல்லா சனசமூக நிலையங்களின் தலைவர்களையும், செயலாளர்களையும் தவறுது பங்குபற்றும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

சுந்தரம் டிவகலாலா
பிராந்திய உள்ளூராட்சி
உதவி ஆணையாளர்.

உள்ளூராட்சி இலாகா,
யாழ்ப்பாணம்.
92-3-26. (ஏ-2002)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு மார்ச் மாதம் 27-ம் திகதி [illegible] வெளியிடப்பட்டது.
Registered as a [illegible] at the General Post Office Sri Lanka under [illegible] Number D/[illegible]/81.